நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மயிலாடுதுறை
முன்னிலை : திருமதி. M.M.J. உம்முல் பரிதா, B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1,
மயிலாடுதுறை.

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 13 ஆம் நாள்
2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் நாள் வெள்ளிக்கிழமை

C.N.R.No.TNMY02-001753-2025

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் 133/2025**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
மயிலாடுதுறை காவல் நிலையம்,
குற்ற எண். 112/2025 ..... குற்றமுறையிடுபவர்

// எதிர்//

செந்தில்வேலன், 34/2025
த/பெ. சாமிநாதன்,
செங்கமேட்டு தெரு,
மயிலாடுதுறை. ..... எதிரி

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட R.O.C. No.814 /2020/ RG/F1 ன் படி வழக்கின் சுருக்கம் மற்றும் Rule 106 Cr.R.P. ன்படி**

**CASE SUMMARY**

| | | | | |
|---|---|---|---|---|
| i) | The period of Remand of the Accused | Date of Remand | Date of Surrender | Released on Bail |
| | | 11.02.2025 | - | 14.02.2025 |
| ii) | Date of filing of the Complaint/Final report in the Court | Filing of complaint | Filing of Final Report | |
| | | 09.10.2024 | 19.03.2025 | |
| iii) | The date of questioning of the Accused U/s.263 of the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 | 29.09.2025 | | |
| iv | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except petitions u/s.355 of BNSS. | Crlmp No. | Date of filing | Result |
| | | U/s.348 of BNSS Crlmp No.867/26 | 13.03.2026 | Allowed |
| | | - | - | - |

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 20:23:33 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| v) | Date of examination in-chief and cross-examination of a witness | Name of the witness | Date of Chief | Date of Cross |
| | | PW1 | 06.03.2026 | 06.03.2026 |
| | | PW2 | 13.03.2026 | 13.03.2026 |
| vi) | Date of examination of the Accused U/s.351(1)(b) Cr.P.C. | 23.03.2026 | | |
| vii) | Details of abscondence of an Accused and his appearance/production, as the case may be; and | Nil | | |
| viii) | Grant of stay by superior court and the results there of | Nil | | |

இவ்வழக்கு 27.05.2025ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 23.03.2026ஆம் தேதி நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து குற்றமுறையிடுபவர் தரப்பில் மயிலாடுதுறை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 திருமதி P. மாலதி அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. N. பிரபு அவர்களும் முன்னிலையாகி இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.

**// தீர்ப்புரை //**

<u>(i) **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**</u> :–

கடந்த 11.02.2025ம் தேதி காலை 10.40 மணிக்கு சாட்சி–1 வீரமணி என்பவர் செங்கமேட்டுத்தெருவில் உள்ள பேபி S.M.S இல்லம் எதிரில் நடந்து வந்து கொண்டு இருந்துள்ளார். அந்த சமயம் எதிரி சாட்சி–1ஐ வழிமறித்து கத்தியை காட்டி ஏய் மரியாதையா உன் சட்டைப்பையில் இருக்கும் பணத்தை எடுத்து என்னிடம் கொடு என்று திட்டியுள்ளார். அவரிடம் சாட்சி–1 நீங்கள் யார் நான் ஏன் உங்களுக்கு பணம் கொடுக்கணும் என்று கேட்டுள்ளார். அப்போது எதிரி சாட்சி–1ஐ பார்த்து ஏன்டா குச்சிக்காரி மவனே, தேவடியா மவனே என்னை உனக்கு தெரியாதா நான் மயிலாடுதுறையிலேயே பெரிய ரவுடி செந்தில்வேலன் யாருன்னு வெளியில் கேட்டுப்பாரு என்னை பத்தி எல்லேபாரும் சொல்லுவாங்கன்னு திட்டிக்கொண்டே சாட்சி–1 அவரது மேல் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த இரண்டு 100 ரூபாய் நோட்டுகளை கையை விட்டு எடுத்துக்கொண்டு சாட்சி–1னிடம் கத்தியை காட்டி இதை போலிசில் சொன்னால் நீ எங்கிருந்தாலும் உன்னை தேடி வந்து கொலை பண்ணிடுவேன்னு சொல்லி மிரட்டிய குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது சட்டப்பிரிவுகள் 126(2), 296(b), 308(5), 351(3) BNSன் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 20:23:47 +0530

2) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு வழக்கிற்கு அடிப்படையான ஆதாரங்கள் இருப்பதால் இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டது. பின்னர் எதிரி இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் முன்னிலையானவுடன் அவருக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 230 BNSSன் படி இலவசமாக வழங்கப்பட்டது. படித்து பார்க்க போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது.

3) பின்னர், எதிரி மீது 126(2), 296(b), 308(5), 351(3) BNSன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றம் பற்றி வினவியபோதும், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு தமிழில் வனைந்து, படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரி அவற்றை மறுத்து குற்றவாளி இல்லை என்றும், எதிர்த்து வழக்காட விரும்புவதாகவும் கூறினார். பின்னர் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் குறியீடு செய்யப்படவில்லை.

**(ii) அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

5) கடந்த 11.02.2025ம் தேதி காலை 10.40 மணிக்கு அ.சா.1 வீரமணி என்பவர் செங்கமேட்டுத்தெருவில் உள்ள பேபி S.M.S இல்லம் எதிரில் நடந்து வந்து கொண்டு இருந்துள்ளார். அந்த சமயம் எதிரி அ.சா.1ஐ வழிமறித்து கத்தியை காட்டி ஏய் மரியாதையா உன் சட்டைப்பையில் இருக்கும் பணத்தை எடுத்து என்னிடம் கொடு என்று திட்டியுள்ளார். அவரிடம் அ.சா.1 நீங்கள் யார் நான் ஏன் உங்களுக்கு பணம் கொடுக்கணும் என்று கேட்டுள்ளார். அப்போது எதிரி அ.சா.1ஐ பார்த்து ஏன்டா குச்சிக்காரி மவனே, தேவடியா மவனே என்னை உனக்கு தெரியாதா நான் மயிலாடுதுறையிலேயே பெரிய ரவுடி செந்தில்வேலன் யாருன்னு வெளியில் கேட்டுப்பாரு என்னை பத்தி எல்லேபாரும் சொல்லுவாங்கன்னு திட்டிக்கொண்டே அ.சா.1 அவரது மேல் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த இரண்டு 100 ரூபாய் நோட்டுகளை கையை விட்டு எடுத்துக்கொண்டு அ.சா.1னிடம் கத்தியை காட்டி இதை போலிசில் சொன்னால் நீ எங்கிருந்தாலும் உன்னை தேடி வந்து கொலை பண்ணிடுவேன்னு சொல்லி மிரட்டிய குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) கடந்த 11.02.2025ம் தேதி மதியம் 12.00 மணியளவில் திரு. இளங்கோவன் சிறப்பு உதவி ஆய்வாளர் மயிலாடுதுறை காவல் நிலைய பணியில் இருந்தபோது வீரமணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனு **அ.சா.ஆ.1** பெற்று, அந்த புகார் மனுவின் அடிப்படையில் அன்றைய தினமே 12.00 மணிக்கு மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண்.112/2025, ச/பி. 126(2), 296(b), 308(5), 351(3) BNSன் படி முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** பதிவு செய்து, பின்னர் வழக்கு கோப்புகளை உதவி ஆய்வாளர் பிரியங்கா மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் 11.02.2025ம் தேதி 13.00 மணிக்கு சென்று சாட்சிகள் ஐயப்பன், கண்ணன் ஆகியோர் முன்னிலையில்

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 20:23:59 +0530

பார்வை மகசர் **அ.சா.ஆ.3** மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** தயார் செய்து, பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, எதிரியை அன்றைய தினமே 16.30 மணிக்கு மயிலாடுதுறை கால்டாக்ஸ் முக்கூட்டு அருகே நின்று கொண்டிருந்தவரை காரணம் கூறி கைது செய்து எதிரியை சாட்சிகள் ராஜ்குமார் மற்றும் ராஜீ ஆகியோர் முன்னிலையில் விசாரணை செய்தபோது தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இவ்வழக்கில் எதிரியை கத்தியை காட்டி மிரட்டியதை ஒப்புக்கொண்டுள்ளதாகவும், அ.சா.1ஐ மிரட்ட பயன்படுத்திய கத்தியை ஆற்றில் வீசிவிட்டதாகவும், பணத்தை செலவு செய்து விட்டதாகவும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியதாகவும், பின்னர் எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, அந்த ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான ராஜ்குமார் மற்றும் ராஜீ ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கைகை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் இளங்கோவனை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் புலன் விசாரணையை முடித்து 06.05.2025ம் தேதியன்று எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 126(2), 296(b), 308(5), 351(3) BNSன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) புகார்தாரரான அ.சா.1 திரு. வீரமணி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார். கூடுதல் சாட்சியான அ.சா.2 திரு. அருண்குமார் உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்தும், எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியமளித்துள்ளார்.

8) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் 13.03.2026அன்று முடிக்கப்பட்டது. அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 9 சாட்சிகள் குறிப்பிடப்பட்டு வழக்கின் தன்மை கருதி பட்டியல் சாட்சிகள் 2 முதல் 9 வரையிலானவர்கள் அரசு தரப்பில் நீக்கறவு செய்யப்பட்டுள்ளார்கள்.

9) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியத்தில், எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சிய விவரங்களை தொகுத்து எதிரியிடம் பிரிவு 351(1)(ஆ)–BNSSன் படி வினவியபோது எதிரி பொய் சாட்சியம், பொய் வழக்கு என்றும், தனது தரப்பு சாட்சியம் இல்லை என்று கூறி எதிரி தரப்பு சாட்சியம் 23.03.2026 அன்று முடிக்கப்பட்டது. எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

10) அரசு தரப்பானது அ.சா.1 பிறழ் சாட்சியாக மாறிவிட்டபோதிலும், அ.சா.2 சாட்சியின் மூலமாக புலன் விசாரணை அதிகாரியின் விசாரணையானது வழக்கு சங்கதியுடன் கோர்வையாக இருப்பதாலும், புலன் விசாரணை முறையாக செய்து ஆவணங்கள் மூலமாக எதிரி செய்த குற்றத்தை அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு அரசு தரப்பால் வாதிடப்பட்டது.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 20:24:05 +0530

11) மாறாக எதிரி தரப்பானது இவ்வழக்கின் புகார்தாரர் பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பு எதிரி மீதுள்ள குற்றத்தை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி இவ்வழக்கிலிருந்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிடப்பட்டது.

<u>ii) தீர்வுக்குரிய பிரச்சினை</u> :–

12) இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில் இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களான சட்டப்பிரிவுகள் 126(2), 296(b), 308(5), 351(3) BNSன் கீழ் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

<u>iv தீர்வு</u> :

13) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கின் சம்பவம் 11.02.2025 தேதி காலை சுமார் 10.40 மணியளவில் மயிலாடுதுறை செங்கமேட்டு தெரு பேபி S.M.S இல்லம் எதிரில் அமைந்துள்ளது. பின்னர் அ.சா.1னிடம் புகார் மனு பெற்று, 11.02.2025ந் தேதி மதியம் 12.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, 11.02.2025ம் தேதி இரவு 07.40 மணிக்கு நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ளது. இவ்வழக்கில் காலதாமதம் குறித்து முதல் தகவல் அறிக்கையில் எவ்வித விளக்கமும் முன்வைக்கப்படவில்லை.

14) அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரராக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார். இவ்வழக்கில் கடந்த 11.02.2025ம் தேதி காலை 10.40 மணிக்கு சாட்சி–1 வீரமணி என்பவர் செங்கமேட்டுத்தெருவில் உள்ள பேபி S.M.S இல்லம் எதிரில் நடந்து வந்து கொண்டு இருந்துள்ளார். அந்த சமயம் எதிரி சாட்சி–1ஐ வழிமறித்து கத்தியை காட்டி ஏய் மரியாதையா உன் சட்டைப்பையில் இருக்கும் பணத்தை எடுத்து என்னிடம் கொடு என்று திட்டியுள்ளார். அவரிடம் சாட்சி–1 நீங்கள் யார் நான் ஏன் உங்களுக்கு பணம் கொடுக்கணும் என்று கேட்டுள்ளார். அப்போது எதிரி சாட்சி–1ஐ பார்த்து ஏன்டா குச்சிக்காரி மவனே, தேவடியா மவனே என்னை உனக்கு தெரியாதா நான் மயிலாடுதுறையிலேயே பெரிய ரவுடி செந்தில்வேலன் யாருன்னு வெளியில் கேட்டுப்பாரு என்னை பத்தி எல்லேபாரும் சொல்லுவாங்கன்னு திட்டிக்கொண்டே சாட்சி–1 அவரது மேல் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த இரண்டு 100 ரூபாய் நோட்டுகளை கையை விட்டு எடுத்துக்கொண்டு சாட்சி–1னிடம் கத்தியை காட்டி இதை போலிசில் சொன்னால் நீ எங்கிருந்தாலும் உன்னை தேடி வந்து கொலை பண்ணிடுவேன்னு சொல்லி மிரட்டிய குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது இதச பிரிவு 126(2), 296(b), 308(5), 351(3) BNSன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 20:24:13 +0530

15) இந்த சங்கதிகளைப் பொறுத்து **அ.சா.1**தனது சாட்சியத்தில், கடந்த 5, 6 மாதங்களுக்கு முன்பாக மயிலாடுதுறை காவல் நிலையத்திற்கு வேறு வேலையாக சென்றிருந்தேன், எதிரியை தெரியாது, எதிரி தன்னை கத்தியை காட்டி மிரட்டி பணம் எதுவும் தன்னிடமிருந்து பறிக்கவில்லை, எதிரியின் மீது புகார் கொடுத்திருப்பதாக கேள்விப்பட்டேன், அவ்வாறு எந்த புகாரும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை, புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்று அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.1ன் சாட்சியமானது புகார் மனுவிற்கு முரண்பட்ட வகையில் அமைந்துள்ளது. எனவே, புகார் மனு அ.சா.ஆ.1 இந்நீதிமன்றம் நம்பும் வகையில் ஏற்கக்கூடியதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. கூடுதல் சாட்சியான **அ.சா.2**ன் சாட்சியம் இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்தும், எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது குறித்தும் அமைந்துள்ளது.

16) மேற்படி அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து அ.சா.1, எதிரி தான் சம்பவத்தில் ஈடுபட்டார் என்று குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. மேலும், எதிரிக்கு எதிராக எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளார். எனவே, எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்கும் வகையில் சாட்சியம் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது. அ.சா.1 எதிரி தான் சம்பவத்தில் ஈடுபட்டதாக நம்பும்படியாகவும், கோர்வையாகவும் சாட்சியமளிக்காதது அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தை எழுப்பும் வகையில் அமைந்துள்ளது.

17) இவ்வழக்கில் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளை விசாரிக்கவில்லை. எனவே அரசு தரப்பில் கூறியுள்ளவாறு சம்பவம் நிகழ்ந்துள்ளது என்பது சந்தேகத்திற்குட்படுவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இவ்வழக்கில் முன்னிறுத்தப்பட்ட ஆவணங்கள் எதிரியை இந்த வழக்குடன் நேரடியாக தொடர்புபடுத்துவதாக அமைந்திருக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18) மேற்படி அரசு தரப்பு சாட்சிகள், அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கூடுதல் சாட்சியான அ.சா.2 உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியமளித்துள்ளார். எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு அரசு தரப்பில் உறுதியூட்டும் வகையில் எவ்வித சாட்சியமும் அரசு தரப்பில் இல்லாத நிலையில் தனித்து இயங்குகிற உறுதியூட்டம் இல்லாத காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் கொண்டு எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாக தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 20:24:19 +0530

19) புகார்தாரரான அ.சா.1 பிறழ் சாட்சியாக மாறியுள்ள நிலையில், அ.சா.2ன் சாட்சியத்தினை மட்டும் அடிப்படையாக கொண்டு அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20) மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது இவ்வழக்கின் சம்பவத்தை பற்றி சாட்சிகள் யாரும் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்காத நிலையில் சம்பவ சமயத்தில் எதிரி தான் அ.சா.1ஐ வழிமறித்து, திட்டி, ரூ.200/- பணத்தை பறித்து, கொலை மிரட்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிக்கப்படவேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21) இறுதியாக, எதிரி மீது சட்டப்பிரிவுகள் 126(2), 296(b), 308(5), 351(3) BNSன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் எதிரி குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரியை பிரிவு 271(1) BNSSன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

22) எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப்பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

23) அரசு தரப்பால் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 20:24:26 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.

**<u>அட்டவணை</u>**

<u>1.அரசு தரப்பு சாட்சிகள்</u>

அ.சா.1 – திரு. வீரமணி (புகார்தாரர்)

அ.சா.2 – திரு. அருண்குமார், உதவி ஆய்வாளர்

2. அரசு தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 11.02.2025 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 11.02.2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 11.02.2025 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.4 | 11.02.2025 | மாதிரி வரைபடம் |

அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை

எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் : இல்லை

குறிப்பு

1. எதிரி விசாரணையின் போது பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறைக்கு அறிவிக்கப்பட்டது.
3. சாட்சிகள் விசாரணையின் போது 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 20:24:38 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.